உ

ஓம் குஹாயநம:

# திருப்புகழமிர்தம்

“தருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்”

மலர் 18 | விஜய ஆண்டு ஐப்பசித் திங்கள் அக்டோபர்-1953 | இதழ் 7

## திருப்புகழ்

### பொது

அமல வாயு வோடாத கமல நாபி மேல் மூல
அமுத பான மேமூல அனல்மூள-
அசைவு றாது பேராத விதமு மேவி யோவாது
அரிச தான சோபான மதனாலே;

எமனை மோதி யாகாச கமன மாம னோபாவ
மெளிது சால மேலாக வுரையாடும்-
எனதி யானும் வேறாகி எவரும் யாதும் யாநாகும்
இதய பாவ னாதீத மருள்வாயே;

விமலை தோடி மீதோடு யமுனை போல வோரேழு
விபுத மேக மேபோல வுலகேழும்-
விரிவு காணு மாமாயன் முடிய நீளு மாபோல
வெகுவி தாமு காகாய பதமோடிக்;

கமல யோனி வீடான ககன கோள மீதோடு
கலப நீப மாயூர இளையோனே-
கருணை மேக மேதூய கருணை வாரி யேயீறில்
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

## பதவுரை

விமலை - மல மில்லாதவராகிய உமாதேவியாருடைய, தொடி மீது ஒடு யமுனை போல—வளையல் அணிந்த திருக்கரத்தினின்றும் தோன்றி உலகெங்குமாய் விரிந்து பரந்து விளங்கிய யமுனாநதி போலவும், ஓர் ஏழு விபுத மேகமே போல-ஒப்பற்றவாய் எங்கும் வியாபித்து நின்ற ஏழு மேகங்களைப் போலவும், உலகு ஏழும் விரிவுகாணும் - ஏழு உலகங்களையும் அதன் அகல நீளத்தை யாராய்கின்ற, மா மாயன் - பெருமைமிக்க திருமால், முடிய நீளுமாபோல - அண்ட முகடுவரை நீண்டு நின்ற விசுவரூபம் போலவும், வெகுவித முக ஆகாய பதம் ஒடி - அநேக திசைகளிலும் ஆகாயத்தின் மீது ஓடிப் பரந்தும், கமல யோனி வீடுஆன ககன கோளமீது ஓடும் - பிரமதேவரது உலகமான பிரமாண்டத்தின் மீதும் தோகையை வீசிப் பறந்து ஓடுகின்ற, கலப நீப மாயூர - கலாபத்தையும் கடப்ப மலர் மாலையும் உடைய மயிலை வாகனமாக வுடையவரே! இளையோனே - இளம் பூரணரே! கருணைமேகமே - கருணையை மேகம்போல் பொழிபவரே! தூய கருணைவாரியே- தூய்மையான கருணைக்கடலே! ஈறு இல் கருணை மேருவே - முடிவு இல்லாத கருணை மேருவாக விளங்குபவரே! தேவர் பெருமாளே - தேவர்கள் போற்றும் பெருமையின் மிக்கவரே! அமல வாயு ஓடாத கமல நாபிமேல் - தூய்மையான பிராணவாயு அதன் இயல்புப்படி ஓடாவண்ணம் மூலாதாரத்தில் அடங்கிநிற்க, மூல அமுத பானமே மூல அனல்மூள-அதனால் அமுதபானம் உண்பதற்கு ஏதுவாக மூலாதாரத்தில் மங்கிநிற்கும் அங்கியை மூளுமாறு செய்து, அசைவுறாது- உள்ளமும் உடலும் உணர்வும் அசையாமற்படி நிறுத்தி, பேராது - அந்தச் சமாதி நிலையினின்றும் சிறிதும் விலகாமல் நின்று, ஓவாது - ஒழியாமல் சாதனை செய்து, அரி சதான சோபானம் அதனாலே - அப் பிராணவாயு நிற்கும் இடங்களாகிய ஆறு ஆதாரங்களாகிய படிகளின் மீது ஏறி அதனால் வந்த சிவயோக சத்தியால்; எமனை மோதி - உயிரைப் பிரித்து அடக்க வரும் கூற்றுவனை வென்று; ஆகாச கமனமாம் மனோபாவம் சால எளிது-ஆகாசகமனம் மனத்தையடக்கித் தியானித்தல் முதலியவைகளை எளிதாக வடைந்து, மேலாக உரையாடும்-மேலானதாகச் சொல்லுகின்ற, எனது யானும் வேறாக - எனது யான் என்ற புறப்பற்றையும் அகப்பற்றையும் வேறாகச் செய்தும், எவரும் யாதும் யானாகும்-எல்லா உயிர்களும் எல்லாப் பொருள்களும் யானாகப்பார்த்து அவற்றுடன் ஒன்றுபட்டு நிற்கும், இதய பாவன அதீதம் அருள்வாயே - உள்ளத்தில் நினைப்பதற்கரிய அப் பெருநிலையை அடியேனுக்கு அருள்புரிவீர்.

## பொழிப்புரை

மலமில்லாதவராகிய உமையம்மையாருடைய வளையலை யணிந்த திருக்கரத்தில் தோன்றி எங்கும் பரந்து வெள்ளமாக ஓடிய யமுனா நதியைப்போலவும், பரந்துள்ள ஒப்பற்ற ஏழு மேகங்களைப் போலவும், ஏழுவுலகங்களையும் ஆய்ந்து பார்க்கின்ற நாராயணமூர்த்தி அண்டமுகடுவரை நீண்டு எடுத்த விசுவரூபம் போலவும், பல திசைகளிலும் விண்மிசை பறந்து ஓடியும், பிரம தேவருடைய உலகமான பிரமாண்டமீதும் ஓடிப் பறந்தும், கலாபத்தையும் கடப்பமாலையையும் உடைய மயிலை வாகனமாகக் கொண்டவீரே! கருணை பொழிகின்ற மேகமே! தூய்மையான கருணைக் கடலே! முடிவு இல்லாத கருணையில் மேரு மலை போன்றவரே! தேவர்கள் போற்றும் பெருமைமிக்கவரே! தூய பிராணவாயு வெளிமுகமாக வோடாதபடி நிறுத்தி அதனால் (மதி மண்டபத்திலுள்ள) அமுதம் பெருகி அதனைப் பருகுவதற்கு ஏதுவாக மூலக் கமலத்திலுள்ள அக்கினி மூளுமாறு செய்து, உள்ளம் உணர்வு உடல் இவைகள் அசையாமற்படியிருந்து, அச் சிவயோக நிலையினின்றும் விலகாதபடி நின்று, இடையறாத சாதனை செய்து, பிராணவாயு தங்குவதற்கு இடங்களாகிய ஆறு தாரங்களாகிய படிகள்மீது ஏறி, இயமனை வென்று, விண்மிசை யுலாவுதல் மனதை யடக்கித் தியானித்தல் முதலியவைகளை மிகவும் எளிதில் பெற்று; மேன்மையான தென்று புகழ்வதாகிய, எனது யான் என்பது வேறுகவும் எவரும் யாவும் யானுகவும் ஆகிய மனதிற்கும் எட்டாத அப் பெருநிலையை அடியேற்கு அருள்புரிவீர்.

## விரிவுரை

**அமலவாயு வோடாத:—**

அமலவாயு—தூய்மையான பிராணவாயு; காமக்ரோத முடையார்க்கு பிராணவாயு சூடாகவும் தூய்மையற்றும் வெளிப்படும். காமக்ரோதமில்லாத யோகிகளுடைய சாந்தமான பிராணவாயு குற்றமற்று இருக்கும்.

அப்பிராணவாயு வெளிமுகப்படாமல் உள் அடங்கிநிற்கச் செய்தல் சிவயோக சாதனையாகும்.

**அமுதபானமே மூலஅனல் மூள:—**

அவ்வாறு பிராணவாயு ஒடுங்கியபடியால் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி எழுந்து, அதனால் அங்குள்ள மூலாக்கினி மூளும். அந்த அக்கினியின் தாக்குதலால் மதிமண்டலம் வெதும்பி அமுதம் பெருகும். அதனையுண்டு யோகிகள் தன்மய மற்று சின்மயமாக வீற்றிருப்பார்கள்.

"நாளும் அதிவேக கால்கொண்டு தீமண்ட
வாசியனலூடு போயொன்றி வானின்க
ணும மதிமீதிலூறுங்கலாயின்ப அமுதூறல்
நாடி........................"
—திருப்புகழ்.

"......................மௌனியாய்க்
கண்மூடி யோடு மூச்சைக்
கட்டிக் கலாமதியை முட்டவே மூலவெங்
கனலினை எழுப்ப நினைவும் பூணிலேன்"
—தாயுமானூர்.

**அசைவுறுது:—**

உள்ளமும் உணர்வும் உடம்பும் அசையாது சித்திர தீபம் போல் சமாதியில் நிலைத்து நிற்றல்; அவ்வாறு நின்ருல் திருவருளைக் காணலாம்.

"ஆடிய கறங்குபோல் ஓடியுழல் சிந்தையை
அடக்கியொரு கணமேனும் யான்
காணிலேன் திருவருளை"
—தாயுமானுர்.

"சங்கையறவே நின்று பொங்கிவரும் பாலுண்டு
அங்கமிளைப்பாறிக்கொண்டு தங்க பொம்மைபோலவே
நில்லுமே"
— கோபாலகிருஷ்ண பாரதி.

**பேராது:—**

மேலே கூறிய சிவயோக நிலையினின்றும் ஒருபோதும் விலகாமல் நிலைத்து நிற்றல். பிரிந்து விலகி இடர்ப்பட்டோர் பலர்; அங்கு நிகழும் சித்திகளைக் கண்டு மயங்கினுர் பலர். உலகவர் புகழுரை கேட்டுத் தியங்கினுர் பலர். ஆகவே அதினின்றும் சிறிது பிறழாமல் உறுதியாக நிற்றல் வேண்டும்.

**ஓவாது:—**

யோகநிலை எய்தினுலுங்கூட அதை ஒழியாமல் சாதனை செய்தல் வேண்டும். சிவஞானபோதத்தில் 7, 8, 9 சூத்திரங்கட்குச் சாதன இயல் என்று பேர்.

சாதனம் செய்யும் முறை, அதற்குரிய அங்கம், அதனுலாகும் பயன் ஆகிய இம் மூன்றையும் தெரிந்துகொண்டு இடையருது சாதனைசெய்து மெய்ப்பொருளை யடையவேண்டும்.

**அரி சதான சோபானம் அதனுலே:—**

சோபானம்—படி.

அரி — காற்று; ச — உடன்; தானம்—இடம்.

பிராணவாயு யோகசாதனையில் தங்குதற்கு இடமாகிய ஆறு ஆதாரங்கள். சாதார யோகம் நிராதார யோகம் என்ற இரு வகையான யோக சோதனைகளில் முதற்கூறிய சாதார யோகத்தைப் பயில்வார், மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும் பிராணவாயுவை நிறுத்தி ஆங்காங்குள்ள ஆதார தேவனைக் கண்டு வணங்கி, அவர்களது அருளால் ஏழாவது இடமாகிய பிரமரந்திரத்தைத் திறந்துகொண்டு, சஹஸ்ராரப் பெருவெளியை யடைந்து சிவமயமாக இருப்பர்.

"மேலை வெளியேறி நீயின்றி நானின்றி
நாடியினும் வேறுதானின்றி வாழ்கின்றதொருநாளே"

"நீடார் சடாதரத்தின் மீதே பராபரத்தை
நீகா ணென அனைச்சொல் அருள்வாயே" —திருப்புகழ்.

எமனைமோதி:—

எமனைத்தாக்கி வெற்றி பெறுவது என்பதன் கருத்து முடிவைச் செய்கின்ற காலத்தை வென்று நித்தியராக சிவயோகிகள் தமது விருப்பப்படி யிருக்க வல்லார் என்பதாகும்.

"......குருநாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறிவார் சிவயோகிகளே
காலத்தை வென்றிருப்பார்; மரிப்பார் வெறுங் கர்மிகளே"

என்று வரும் கந்தரலங்காரப் பாடலையும் இங்கு காண்க.

"எமபடரை மோதுமோன உயிரையிலுப தேசவானை
எனது பகைதீரநீயு மருள்வாயே"
—திருப்புகழ்.

ஆகாசகமனமா மனோபாவம்:—

ஆகாச கமனம்—விண்ணிடை சஞ்சரித்தல்; சிவயோக சாதனையால் இவ் வுடம்பினுடைய கனங் குறைந்து, ஒளி மயமாவதால் ஆகாசகமன முதலியவைகள் எளிதில் உண்டாகும்.

மனோபாவம்—மனத்தில் மெய்ப்பொருளை நினைத்து நினைப்பற நிற்றல்—தியானம்; இதை மாணிக்கவாசகர் **"தேனிப்பு"** என்று கூறுகின்றார்.

சிரிப்பார் களிப்பார் **தேனிப்பார்** திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடும் தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி இனித்தான் வல்காயே.

**எனதி யானும் வேருகி:—**

எனது—புறப்பற்று; யான் அகப் பற்று.

பற்றற்ருர்க்கே பிறப்பறும். "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பார் நம்மாழ்வார்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப்படும்.

யான் எனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்.

பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

என்னும் தெய்வப் புலவர்—திருவள்ளுவர் வாக்குகளையும், அதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையையும் இங்கு உய்த்துணர்க. புறப்பற்று அகப்பற்று என்பதனை வடநூலார் மமகாரம் அகங்காரம் என்பர்.

என்னது யான் என்ற இரண்டும் அற்ருர்க்கு எல்லா இடங்களும் சிவ சந்நிதியாகவே தோன்றும். அவர்கட்கு சுட்டறிவு இன்றி அருளறிவு தோன்றும்.

என்னதுயான் என்னல் அற்ருேர் எங்கிருந்து பார்க்கினும் நின்
சன்னிதியாம் நீபெரிய சாமி பராபரமே.

என்னதுயான் என்பதற எவ்விடமும் என்ருசான்
சன்னிதியாக் கண்டு நிட்டை சாதிப்ப தெக்காளோ.—தாயுமானுர்.

யான் என்றது அற்ற இடம் ஒரு திருவடி; எனது என்றது அற்ற இடம் ஒரு திருவடி. ஆகவே இறைவனுடைய இரண்டு திருவடிகளும் இருவகைப் பற்றும் அற்ற இடங்களாம். "திருவடி பெற்ருன்" "திருவடிப் பேறு" என்பதற்கெல்லாம் பொருள் பற்றற்ற நிலையடைதல் என்பதாகும்.

இக் கருத்து கந்தர் கலி வெண்பாவில் குமரகுருபரர் கூறுமாறு காண்க,

"யான் எனதென் றற்ற இடமே திருவடியா
மோன பரானந்த முடியாக" —கந்தர்கலிவெண்பா

யான் யான் என்றும், என்னது என்னது என்றும் இறுமாந்து கருமாந்திக் கெடுகின்றனர் பலர். தனதல்லாததை எனதென்பது பேதைமையுமாகும். ஆகவே இதனை அறவே துறந்து உய்வுபெறல் வேண்டும்.

**எவரும் யாதும் யானுகும் இதய பாவனுதீதம்:—**

எவரும்—உயர்திணை. யாதும்— அஃறிணை.

சராசரங்களெல்லாம் தானுகுந் தன்மை. அங்ஙனம் ஆனோர் சிந்தனை எங்குந் தங்கும்; அவர்கள் செயல் எங்கும் நிகழும்.

எனது யான் என்பதைக் களைந்து எல்லாரும் எல்லாமும் தானனவர் சுகர். அவர் ஒரு சமயம் **"சிவமே!"** என்று அழைத்தார். அக்காட்டில் உள்ள கல் மண் குன்று செடி கொடி புல் பூண்டு பட்சி விலங்கு முதலிய எல்லாம் **"ஏன்"** **"ஏன்"** என்று அவருக்கு மறு மொழி கூறினவாம்.

அங்கமே நின்வடிவ மானசுகர் கூப்பிடநீ
எங்கும் ஏன் ஏன்என்ற தென்னே பராபரமே.

—தாயுமானர்.

இந்த நிலை மிகப் பெரிய நிலை. அதனால் இதை "இதயபாவனதீதம்" என்ருர். மனதில் நினைப்பதற்கும்கூட முடியாத அத்துணைப் பெருமையுடையது. "உலகேழும் யானகை" என்று அருணகிரிநாதர் பிறிதொரு திருப்புகழிலும் இந் நிலையைத் தான் பெற்றதாகக் கூறியிருக்கின்ருர்.

எனதியானும் வேருகி எவரும் யாதும் யானகும்
இதயபாவன தீதம் அருள்வாயே.

என்ற இத்திருப்புகழடி எப்போதும் மறவாமல் நினைந்து உணர்ந்து உய்வு பெறத்தக்கது.

**விமலை தோடி மீதோடு யமுனை போலவே:—**

விமலை—பார்வதி; மலமில்லாதவள்.

தொடி என்ற சொல் சந்தத்தை வேண்டி தோடி என்று நீட்டல் விகாரம் பெற்றது.

தொடி—வளையல். வளையல் அணிந்த கரத்தினை இது குறிக்கின்றது. ஆகு பெயர்.

கங்கை யமுனை முதலிய நதிகள் உமையம்மையாருடைய வளையல் அணிந்த திருக்கரங்களினின்றும் தோன்றியன.

### கங்கை பிறந்த வரலாறு

திருக்கைலாய மலையில் மணித்தவிசின் மீது பவளமலை போலே சிவபெருமான் வீற்றிருந்தருளினர். மரகதக் கொடி போன்ற உமாதேவியார் ஒரு திருவிளையாடல் காரணமாகச் சிவ பெருமானுடைய பின்புறமாக வந்து மெல்ல அவரது திருக்கண்களைத் தமது திருக் கரங்களால் மூடினர். அதனல் அகில உலகங்களும் இருண்டுவிட்டன. உலகில் உள்ள ஒளிப் பொருள்கள் யாவும் இறைவனுடைய கண்களின் ஒளியே என்பதை உலகம் அப்போது உணர்ந்தது. இறைவனுக்கு ஒரு கணமாகிய அந்த நேரம் ஏனைய தேவர்கட்கும் மனிதர்கட்கும் பல யுகங்கள் ஆயின. ஆன்மாக்கள் இருளில் இடர்ப்பட்ட போது இறைவர் தமது நெற்றியில் உள்ள ஞானக்கினிக் கண் மலரைச் சிறிது திறந்தருளினர். அதனல் ஒளியுண்டாக உல

கங்களின் இடர் நீங்கியது. அப்போது அம்மை அஞ்சி தமது மலர்க்கரங்களை எடுத்தனர். அக் கர மலர்களின் பத்து விரல் களினின்றும் பத்து கங்கைகள் தோன்றின. அவைகள் அகில உலகங்களிலும் ஓடிப் பரந்து வியாபித்தன. அதனைக் கண்ட அமரர்கள் இறைவனிடம் ஓடி முறையிட்டனர். கருணை வள்ள லாகிய சிவபெருமான் அக் கங்கையைத் தமது சடையில் ஏற் றருளினர். உலகமெல்லாம் பரவி அழிக்கத் தொடங்கிய கங்கை இறைவருடைய சடையில் ஒரு ரோமத்தில் அடங்கியது.

மாலயனுதி வானவர்கள் சிவபெருமானை வணங்கி நின்று' "ஞானம்பாளுடைய திருக்கரங்களில் தோன்றியதனுலும், தேவ ரீருடைய திருச்சடைமுடியில் தங்கியதனுலும் உயர்ந்த இக் கங்கை நீரில் சிறிது எமது உலகங்கட்கும் தந்து உதவவேண். டும்" என்று இரந்தார்கள்.

மேதினி யண்ட முற்றும் விழுங்கிய கங்கையுன்றன்
பாதியாள் கரத்திற் ருேன்றும் பான்மையால் உனது சென்னி
மீதினில் செறிக்கும் பண்பால் விமலமாம் அதனில் எங்கள்
மூதெயில் நகரம் வைகச் சிறிதருள் முதல்வ என்ருர்.

—கந்தபுராணம்.

அவ்வண்ணமே சிவமூர்த்தி தமது திருமுடியில் விளங்கிய கங்கையில் சிறிது அமரர்க்கு வழங்கியருளினர். அதைப் பெற்ற மால் பிரமன் முதலியோர் தத்தம் உலகில் கொண்டுபோய் அமைத்து கங்கையால் புனிதம் பெற்ருர்கள்.

சத்தியவுலகில் தங்கிய கங்கையைப் பகீரதமன்னன் வேண்ட மீண்டும் சிவபெருமான் அதனைத் தமது சென்னியில் ஏந்தி பூமிக்கு அனுப்பியருளினர். அது பாகீரதி என்ற பெயருடன் பாதலத்தில் கபிலரால் எலும்புக் குவியலாய்க் கிடந்த அறுபதி னுயிரம் விரர்களாகிய சகரர்கட்கு அருள் செய்தது.

இத்தகைய கங்கையின் ஒரு பிரிவு யமுனைநதி. அது கருமையாகவும் பரந்தும் இருக்கும். எம்பெருமானுடைய மயில் தனது பச்சைக் கலாபத்தை விரித்துப் பறக்கும் அழகு, உமை யம்மையின் திருக்கரத்தில் தோன்றி எங்கும் பரவிய யமுனைநதி போல் காட்சி தருகின்றது என்று அடிகளார் மிகவும் அழகாகக் கூறுகின்ருர்.

**ஓரேழு விபுத மேகமேபோல:—**

விபு—வியாபகம்; ஆகாயமெங்கும் வியாபித்திருக்கின்ற ஏழு மேகங்களைப் போலே மயில் எங்கும் நிழல் படுமாறு தோகையை விரித்து பறக்கின்றது.

**உலகேழும் விரிவு காணுமாமாயன் முடிய நீளுமாபோல:—**

காத்தல் தொழிலைப்புரியும் நாராயணர் எங்கும் நிறைந் திருப்பவர். விஷ்ணு என்ற சொல்லுக்கு வியாபகமானவர்

என்பது பொருள். எனவே வியாபகமாகிய திருமால் விசுவ ரூபங் கொண்டால் எப்படியோ அப்படி மயில் உலகமெல்லாம் தனது மரகத ஒளியை வீசிப் பறந்து வருகின்றது.

மயிலுக்கு மூன்று உவமைகள் கூறினர். ஒன்று யமுனநதி; ஒன்று மேகம்; ஒன்று திருமாலின் விசுவரூபம். மூன்றுங் கருமை நிறமுடையவை. மயில் பச்சை நிறமுடையது. மயிலின் பெருமையை இப்படி அருணகிரிநாதர் அழகாக எடுத்துக் கூறுகின்றார். படிக்கப் படிக்கப் பரவசமாகும் பைந்தமிழ்ப் பாடல் இது.

"கருணை மேகமே தூய கருணை வாரியே ஈறில்
கருணை மேருவே தேவர் பெருமாளே"

முருகப் பெருமானையும் மூன்று சொற்றொடர்களால் இங்கு விளித்துத் துதிக்கின்றார். **"கருணை மேகம்" "கருணைவாரி" "கருணை மேரு".**

கருணை பொழிவதனால் 'மேகம்' என்றார். கடல் இல்லை யானால் மேகம் பொழிய இயலாது. ஆகவே மேகத்திற்குக் கடல் ஆதாரம். ஆதலினால் "கருணை வாரி" என்றார். கடல் உப்புக் கடல் ஆதலால், 'தூய கருணைவாரி' என்றார். கடலுக்கும் உல குக்கும் ஆதாரமாக இருப்பது மேருமலை யாதலினால் 'கருணை மேரு' என்றார். மேகம், வாரி, மேரு என்ற மூன்றாக முருகவேளை உருவகம் செய்தனர். கைமாறு கருதாமல் உதவுவது மேகம். கரையிலாமல் நின்று விலையுயர்ந்த மணி முத்துக்களுக்கு உறைவிடமாயது கடல். என்றும் சலியாமல் உயர்ந்து நிற்பது மேரு. இது போல் கடவுள் தன்மைகள் விளங்குகின்றன. உய்த்துணர்க.

## கருத்துரை

**மயில் வாகனக் கடவுளே! கருணை மூர்த்தியே! சிவயோக நிலையில் நின்று எனது யான் என்பவை களை நீக்கி எல்லாரும் எல்லாமும் யானாகும் பெரு நிலையை அடியேனுக்கு அருளுவீர்.**

---

## ஸௌராஷ்ட்ர நீதிஸம்பு

115. ஒருவனுடைய பேச்சில் குணமும் குற்றமும் இருப்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் சபையோர் ஒப்புக்கொள்ளும்படிப் பொருத்தமாகப் பேசி யோக்யதையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

உ
திருச்சிற்றம்பலம்

# பெரிய புராணம்

## சேரமான் பெருமாள் நாயனூர் புராணம்

(கருசம் பக்கத் தொடர்ச்சி)

### விளக்கம்

**கோடுங்கோளூர்**

கொடுங்கோளூர் என்னும் இப்பதி பரம்பரையாகச் சேரர்குல மன்னர்கள் வீற்றிருந்து அரசுபுரிந்த அரிய திருநகரமாகும். "சேரர்குலக் கோவீற்றிருந்து முறைபுரியும் குலக்கோ மூதூர் கொடுங்கோளூர்" என்று சேக்கிழார் பெருமான் கூறுகின்றூர்.

**மகோதை** என்ற ஒரு பேரும் இப்பதிக்கு உண்டு.

**திருவஞ்சைக்களம்**

இத் திருத்தலம் மலைநாட்டில் உள்ளது. சென்னைக்கு தென்மேற்கே, முன்னூற்று அறுபது மைல் தூரமுள்ள சோரனூர் என்ற ஜங்ஷனுக்குத் தென்மேற்கு முப்பத்தைந்து மைல் தூரத்திலுள்ள இருஞாலக்கடை என்னும் ஊரை அடைந்து, அங்கிருந்து தென்மேற்கு (குதிரைவண்டியில்) ஆறு மைல் சென்று அங்கிருந்து கழியில்(படகில்) நான்கு மைல் சென்றுல் திரு அஞ்சைக்களத்தைச் சேரலாம். கழியில் இரண்டரை மைல் கடந்ததும் கொடுங்கோளூர் இருக்கின்றது. எர்ணுகுளம் ஸ்டேஷனிலிருந்து ஸ்டீம்லான்சில் இருபத்திரண்டு மைல் தூரம் கழியிற் சென்று கோட்டப்புரம் அடைந்து, அங்கிருந்து வடக்கு முக்கால் மைல் சென்றுலும் திரு அஞ்சைக்களத்தைச் சேரலாம். சுந்தரர், சேரமான்பெருமாள் ஆகிய இருவர்களின் உற்சவ விக்கிரகங்கள் இருக்கின்றன. சுந்தரமூர்த்தி நாயனுருடைய தேவாரம் பெற்றது. சுந்தரர் வெள்ளையானை மீதும், அவருடைய தோழர் சேரமான் குதிரையின் மீதும் ஏறிக் கயிலைக்குச் சென்ற மிக அரிய விழுமிய திருத்தலம். சுவாமியின் திருநாமம்: **அஞ்சைக்களத்தீசுரர்**. அம்மையின் திருநாமம்: **உமையம்மை**. தீர்த்தம்: சிவகங்கை.

**சேரமான் பெருமாள் நாயனுர்**

இவருக்குப் பிள்ளைத் திருநாமம் **பெருமாக்கோதையார்**. இறைவனிடம் வேண்டி எல்லா வுயிர்களும் பேசும் மொழிகளை யறியுந் திறம்பெற்றதனுல் "**கழறிற்றறிவார்**", சேரர் குலத் தலைவராதலின் "**சேரமான் பெருமாள்**", சுந்தரருக்குத் தோழரானதால் "**சுந்தரர் தோழர்**" என்ற பலபேர்கள் உண்டு.

இவர் அரசபோகத்தைத் துறந்து திருவஞ்சைக்களத்தில் திருக்கோயில் திருத்தொண்டையே பெரும்பேருகக் கருதி திரு

வெண்ணீறு புனைந்து அன்புக்குக் கருவூலமாக விளங்கி அருட் பணி புரிந்தார் என்றால் இவருடைய பண்பாடு பகர்தற்கரிய தன்றோ? இவர் அரசராகவும் அடியாராகவும் கவிபாடும் புலவ ராகவும் விளங்கினர்.

மண்மேல் சைவ நெறிவாழ வளர்ந்து முன்னை வழியன்பால்
கண்மேல் விளங்கு நெற்றியினர் கழலே பேணுங் கருத்தினராய்
உண்மே வியஅன் பினராகி உரிமை அரசர் தொழில்புரியார்
தெண்ணீர் முடியார் திருவஞ்சைக் களத்தில் திருத்தொண்டேபுரிவார்.

என்ற திருப்பாடலினால் இவருடைய தொண்டின் பெருமை புல னாகின்றது.

அப்போது சேரநாட்டை யரசுபுரிந்துவந்த **செங்கோற் பொறை யன்** என்ற மன்னன் மாண்டனன். மலைநாட்டில் சொத்துரிமை மருமான் வழியாகும். அக்காரணத்தினால் அந்நாட்டிற்கு அர சாகும் உரிமை யிவருக்கே யாகும் என்று அமைச்சர்கள் ஆராய்ந்து, திருவஞ்சைக்களம் சிவாலயத்திலே தொண்டு புரியும் இவர்பால் வந்து "மகுடாபிஷேகஞ் செய்து கொண்டு அரசுபுரிய வாரும்" என்று அழைத்தபோது இவர் மனோநிலையை உற்றுநோக்குமின். பெரிய அரச பீடம் வரு கின்றதே என்று மகிழ்ந்தாரில்லை. சிறிய மந்திரி பதவிக்கு எத்தனை போட்டி; எத்தனையார்வம். இவர் "இன்பம் பெருகும் திருத்தொண்டுக் கிடையூறாக இவர் மொழிந்தார்" என்று வருந்தினர் எனில், அரசபோகத்தைத் துரும்பாக எண்ணி, அரனார் திருத்தொண்டையே பெரிதும் மதித்தார் என்பது தெளிவாகின்றது.

இறைவனிடத்தில் வேண்டி எல்லா உயிர்களும் பேசும் மொழிகளை யறியும் ஆற்றலைப் பெற்று முடிசூட்டிக்கொண்டார். எல்லா வுயிர்களின் துன்பங்களை யகற்றுவான் வேண்டி இவ்வாறு பெற்றார். அதனால் **கழறிற்றறிவார்** என்ற நாமமும் பெற்றார்.

மகுடம் புனைந்து அரசயானை மீது பவனிவருகின்ற போது எதிரில் உவர் சுமந்து மழையால் நனைந்து, வெய்யிலால் உலர்ந்த ஒரு வண்ணான் வந்தான். வண்ணான் வருவது நற் சகுனம் என்பர். எனவே இவர் அரசு உலகிற்கு நலம்பயக்கும் என்பதை அது அறிவிக்கின்றது.

மேலும் அந்த வண்ணானைக் கண்டு அவன் மேலிருந்த உவர்மண்ணைத் திருநீறு என்று மாறுபட நினைந்து இவர் வணங்கினாரில்லை. அவ்வாறு ஒன்றை ஒன்றாக உன்னுவ ராயின் அது அரச பதவிக்கே இழுக்கு. ஏகாலியைக் கண்டு அவன் மீதிருந்த உவர்மண் திருநீற்றின் வேடத்தை நினைப் பித்தபடியால் அந்த அரிய உபகாரத்தை யுன்னி யானை மீதி

னின்றும் இழிந்து அவ் வண்ணானை வணங்கினார். "அடியார் வேடம் என்றுணர்ந்தே" என்ற சொற்றொடரால் இதனையறிக. மன்னர் பெருமான் தன்னை வணங்கியதைக் கண்ட வண்ணான் நடுநடுங்கி "அண்ணலே! என்னை யாரென்று எண்ணினீர்" என்றான். அப்போது சேரர் பெருமான் சொல்லிய பதிலையும் இங்கு உன்னுக. "உன்னை நான் அடியவர் என்று மாறுபட நினைத்து வணங்கினேனில்லை; அடியார்கோலத்தை நினைப்பித்தபடியால் வணங்கினேன்" என்று கூறியருளினார். இதனால் இவருக்குத் திருநீற்றிலே இருந்த அன்பு இமயமலையினும் உயர்ந்தது என்பது விளங்குகின்றது. ஆ! ஆ! அடியார் பக்தி தான் என்னே!

இத்தகைய சிறந்த ஒப்பற்ற அன்பு இவர்பால் இருந்ததனாலன்றோ வழிபாட்டின் முடிவில் நடராஜப் பெருமானுடைய சிலம்போசை கேட்கும் பெரும்பேறு இவருக்கு நாடோறும் கிடைத்தது.

### கோடைத்திறம்

மதுரையில் சோமசுந்தரக் கடவுளை நாளும் இன்னிசையால் பாடி வழிபடும் பாணபத்திரர் வறுமையால் வருந்தினார். அவருடைய நல்குரவை யகற்ற எண்ணிய சோமசுந்தரப் பெருமான், மதுரையை யாளுகின்ற பாண்டியனுக்குச் செல்வந் தருமாறு கட்டளை யிட்டாரில்லை. சோழமன்னனுக்குக் கடிதந் தந்தாரில்லை. குபேரனுக்கு அனுமதி தரவுமில்லை. இம்மூவரினும் கொடைத் திறத்தால் உயர்ந்த சேரமான் பெருமானுக்கு இறைவர் திருமுகங் கொடுத்து அனுப்பினர் எனில் இவரது கொடைப் பெருமை அளவிட முடியுமோ? இறைவரது திருமுகத்தைக் கண்ட சேரர் பெருமானார், அன்று தமது கருவூலத்தில் குன்று போல் குவிந்திருந்த பொன் மணி முதலிய செல்வங்கள் சிறிதும் மிச்சமில்லாமல் எடுத்து பொதிகளாகச் செய்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் வழங்கிய வள்ளன்மை வரம்புடைத்தோ?

இதுவேயுமின்றி, நம்பியாரூரரை கொடுங்கோளூருக்கு அழைத்துச் சென்று அளவற்ற அன்புடன் வந்தனை வழிபாடு செய்து, அன்று கருவூலத்தில் நிறைந்திருந்த செல்வங்களத்தனையும் பொதிசெய்து உள்ளம் உருகி வழங்கிய வள்ளன்மையும் ஈண்டு ஒருங்கு நினைந்து பாராட்டுதற் குரியது.

"ஆங்கவரும் அன்றுவரை ஆயமா கியதனங்கள்
ஓங்கிய பொன் நவமணிகள் ஒளிர்மணிப்பூண் துகில்வருக்கம்
ஞாங்கர் நிறை விரையுறுப்பு வருக்கமுதல் நலம்சிறப்பத்
தாங்குபொதி வினைஞர்மேல் தலமலியக் கொண்டணைந்தார்"

### நம்பியாரூரர் நட்பு

நம்பியாரூரருக்கும் சேரமான் பெருமாள் நாயனாருக்கும் இயைந்த நட்பு மிகவும் விழுமியது. ஏனையோருடைய நட்புக்கும்

இதற்கும் அஜகஜம் போல் வேற்றுமையுண்டு. இவர் சேர நாட்டரசர். சோழ நாட்டுக்குத் தலைநகராகிய திருவாரூருக்குச் சென்றபோது சோழமன்னருடைய அரண்மனையிலே தங்கி அவருடைய ராஜோபசாரத்தைப் பெறுமல், சுந்தரருடைய திருமடத்திற்குச் சென்று பரவையார் படைத்த விருந்தைத் தெய்வ மருந்தென உண்டு மகிழ்ந்ததுவே இவருடைய நட்பின் பெருமைக்குப் போதுமான சான்றாகும். சேரரும் ஆரூரரும் சந்தித்த சந்திப்பைச் சிந்திக்குந்தோறும் சித்தம் உருகுமாறு சேக்கிழார் பெருமான் கூறியருளுவதைக் காண்க.

முன்பு பணிந்த பெருமானைத் தாமும் பணிந்து முகந்தெடுத்தே
அன்பு பெருகத் தழுவவிரைந் தவரும் ஆர்வத்தொடு தழுவ
இன்ப வெள்ளத் திடைநின்றும் ஏறமாட்டா தலைவர்போல்
என்பும் உருக உயிர் ஒன்றி உடம்பும் ஒன்றும் என இசைந்தார்.

சேரமான்பெருமாள் நாயனர் நம்பியாரூரரைத் தமது கொடுங்கோளூருக்கு அன்புடன் அழைத்துக்கொண்டு சென்றபோது இருவருக்கும் உள்ள நட்பின் தகைமையைக் கண்ட அந்நகர மாந்தர் நனியுவகை கொண்டு இறும்பூதுற்று வாயார வாழ்த்திக் கூறிய வசனங்களையும் ஈண்டு நினைவு செய்க.

"நல்ல தோழர் நம்பெருமாள் தமக்கு நம்பி இவர் என்பார்
எல்லை இல்லாத் தவமுன்பென் செய்தோம் இவரைத் தொழ என்பார்
செல்வம் இனியென் பெறுவது நம் சிலம்பு நாட்டுக் கெனவுரைப்பார்
சொல்லுந் தரமோ பெருமாள்செய் தொழிலைப்பாரீர்எனத்தொழுவார்"

## திருவைந்தெழுத்தின் சிறப்பு

திருவஞ்சைக்களஞ் சென்று சிவமூர்த்தியை வழிபட்ட திருநாவலூரர் திருக்கயிலை சென்றணையவேண்டுமென்று சிந்தித்தார். வேண்டுவார் வேண்டுவதே வழங்கும் விரிசடை விமலனர் தமது ஐராவண மென்ற யானை மீது நம்பியாரூரரை ஏற்றிக்கொண்டு வருமாறு மாலயனுதி வானவர்க்குக் கட்டளையிட்டருளினர். அவ்வண்ணமே ஆரூரர் யானையின் மீது ஆரோகணித்து விண்மிசை செல்லும்பொழுது சேரமான் பெருமானை நினைந்தருளினர். அந்நினைவை யறிந்த சேரமன்னர் புரவியின் மீது ஊர்ந்து திருவஞ்சைக்களம் சென்றார். தோழனர் விண்மிசைச் செல்லக் கண்டு, தமது புரவியின் செவியில் திருவைந்தெழுத்தை ஓதினர். ஐந்தெழுத்தின் அதிசய சக்தியால் அப்புரவி ஆகாயமிசை பறந்து சென்று ஐராவணத்தை வலம் வந்து அதற்கு முன் சென்றது. இதனுல் திருவைந்தெழுத்தின் சிறப்பு நன்கு புலனுகின்றது.

"விட்டவெம் பரிச்செவியினில் புவிமுதல் வேந்தர்தாம் விதியாலே
இட்டமாம் சிவமந்திரம் ஓதலின் இருவிசும்பெழப் பாய்ந்து
மட்டலர்ந்த பைந்தெரியல் வன்றெண்டர்மேல் கொண்ட மாதங்கத்தை
முட்டயெய்தி முன்வலங்கொண்டு சென்றதுமற்றதன்முனுக."

"நாங்கள் இப்போது ஒரு குதிரையின் காதில் ஐந்தெழுத்தை ஓதினால் அக்குதிரை விண்மிசை பறக்குமோ?" என்று மந்த மதியினர் சிலர் வினவுவார். "இளமையிலிருந்து பல கோடி முறை திருவைந்தெழுத்தை அன்புடன் என்புருகி ஓதி ஓதி மந்திர சித்திபெற்ற சேரமான் பெருமானுக்கு அது எளிதென உணர்க. அங்ஙனம் ஓதி உய்வுபெறாத மாக்களுக்கு அது அரிதெனத்தெளிக".

**செந்தமிழ்ப் பெருமை**

ஒரு நூலை ஒருவர் பாடினால் உணர்வுமிக்கார் முன் அது அரங்கேறுதல் வேண்டும். அரங்கேறாத நூலை உலகினர் ஒப்புக்கொள்வதில்லை. இம் முறையில் பல மொழிகளிலும் பாடிய நூல்கள் மண்ணுலகில் மதிநல மிக்க ஆன்றோர்களின் முன் அரங்கேறுவது இயல்பு. நமது சிவநெறிச் செம்மலாகிய சேரமான் பெருமாள் பாடியருளிய செந்தமிழ் நூலாகிய திருக் கயிலாய ஞான உலா, கயிலை மலையில் கண்ணுதற் பெருமான் முன் அரங்கேறியதென்றால் அமிழ்தினு மினிய தமிழின் பெருமையை அளவிடவல்லார் யார்? ஆகவே திருக்கயிலாய மலை சென்று தேவதேவன் முன் அரங்கேறிய மொழி செந்தமிழ் எனத் தெளிக.

வேதாகமங்களை மொழிந்த விடையவனார் சேரர்கோன் மொழிந்த திருப்பாடலைக் கேட்டு சித்தம் மகிழ்ந்தருளினாரெனில் இவருடைய வாக்கு வன்மை வரம்புடைத்தாமோ?

"பெருகுவேதமும் முனிவரும்துதிப்பரும் பெருமையாய் உனையன்பால்
திருவுலாப் புறம் பாடினேன் திருச்செவி சாத்திடப் பெறவேண்டும்
மருவுபாசத்தை அகன்றிட வன்றொண்டர் கூட்டம் வைத்தாயென்ன
அருளும் ஈசரும் சொல்லுக என்றனர் அன்பரும் கேட்பித்தார்.

சந்தப் புகழ் பாடிய எந்தை அருணகிரிநாதரும் பழநிமலைத் திருப்புகழில் சேரர்கோன் பாடியருளிய திருகயிலாய ஞான உலாவை மிகமிக இனிதாக எடுத்துப் புகழ்ந்து ஓதிய திருவாக்கையும் அன்பர்கள் இங்கு படித்து மகிழ்க.

"ஆதரம் பயில் ஆரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி,
ஆதியந்த உலாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே."

**இவர் பாடியருளிய நூல்கள்**

இவர் மூன்று நூல்கள் அருளிச் செய்தனர். **"பொன்வண்ணத் தந்தாதி" "திருவாரூர் மும்மணிக்கோவை" "திருக்கைலாயஞான உலா"**

என்பவைகளாகும். இம் மூன்றும் அகப்பொருள் துறையி லேயே அமைந்தவை.

## 'திருவருளின் சிறப்பு'

### பாடலின் அருமை

"சிவபெருமான் திருவருளே எல்லாவற்றினும் மேலானது. அருளையே வேண்டிப் பெறுதல் வேண்டும். அந்த அருளை யின்றி மலையளவு செல்வத்துடன் இவ் வையமெல்லாம் பெற்ரு லும் நான் நஞ்சினுங் கொடியதாக நினைப்பேன்; சிவனருளால் புழுவாகப் பிறக்கினும் வானவர் வாழும் பொன்னுலக இன்ப மாகக்கருதுவேன்" என்று கூறிச் சிவபிரான் திருவருளைச் சிறப் பித்துக் கூறும் செஞ்சொற் பாடலைக் காண்க.

தனக்குன்ற மாவையஞ் சங்கரன் தன்னருள் அன்றிப்பெற்ருல்
மனக்கென்றும் நஞ்சிற் கடையா நினைவன்; மதுவிரியும்
புனக்கொன்றை யான் அருளால் புழுவாகிப் பிறந்திடினும்
எனக்கென்றும் வானவர் பொன்னுலகோடொக்க எண்ணுவனே.

## 'வருவது வந்தே தீரும்'

நாம் முன்செய்த கன்மங்கட் கிடாய் சிவனருளால் வரு வதை யாராலுந் தடுத்து நிறுத்த முடியாது; போவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. சிவன் செயலின் படியே எதுவும் நிகழும். ஆகவே வரும்போது மகிழாதே; போம் போது புலம்பாதே" என்ற கருத்தில் இவ்வழகிய திருப்பாடல் அமைந்திருப்பதைக் காண்க.

ஆவனயாரே அழிக்கவல்லார் அமையாவுலகில்
போவனயாரே பொதியகிற்பார் புரம் மூன்றெரித்த
தேவனைத் தில்லைச் சிவனைத் திருந்தடி கைதொழுது
தீவினையேன் இழந்தேன் கலையோடு செறிவளையே.

### கருவிகரணங்கள் யாவும் அரன்பணியிலேயே அமைக்கவேண்டும்

சிந்தனை செய்ய மனம் அமைத்தேன் செப்பநா அமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்தேன் கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற்கன் பமைத்தேன் மெய் அரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி யீசற்கிவையான் விதித்தனவே.

## மறவா வரம் வேண்டும்

இறைவனிடத்தில் ஒன்றையுமே யாசிக்கக்கூடாது. கூடும் அன்பினலேயே கும்பிட வேண்டும். ஒருவேளை ஏதாவது கேட்டுப் பெறவேண்டும் என்று தோன்றுமானல் அவன் திரு வடியை மறவாமை ஒன்றே பெறவேண்டும். அதுவே நல்வரம்.

பொய்த்தல் இல்லாத நரகம் புகுந்தாலும் சரி; சுவர்க்கம் பெற்றாலும் சரி; இரண்டும் ஒன்றுதான். ஊர்வன; பறப்பன; நடப்பன என்பனவாதி குறுக்கு உடம்புடைய உயிர்களாகப் பிறந்தாலும் சரி; துன்பத்தால் நைந்து மாண்டாலும் சரி; உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆண்டாலும் சரி. அவன் அடிமலர் மறவா வரம் ஒன்றுமட்டும் பெறவேண்டும்.

பொய்யா நரகம் புகினும் துறக்கினும் போந்து புக்கிங்
குய்யாவுடம்பினொ டூர்வ நடப்ப பறப்ப என்று
நையா விளியினும் நானிலம் ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான் அடிமற வாவரம் வேண்டுவனே.

நம்முடைய வாழ்நாளில் பாதி உறக்கத்திற் கழிகின்றது. மற்றப் பாதி கொடிய நோய், குழவிப்பருவம், காளைப்பருவம், மூப்பு இவைகளிலும், அச்சம், சினம், ஆசை, பொறாமை, இவைகளிலும் கழிகின்றது. இப்படி இருபாதியும் கழிந்தால் உமையவளுக்கு ஒரு பாதியும் அச்சுதனுக்கு ஒரு பாதியும் தந்த மாயவனாகிய ஈசன் பாதத்தை நினைந்து உய்வது எப்போது என்று ஒரு அருமையான பாடலைப் பாடியிருக்கின்றார்.

வேண்டிய நாட்களில் பாதியும் கங்குல் மிகஅவற்றுள்
ஈண்டிய வெங்நோய் முதலது பிள்ளைமை மேலது மூப்
பாண்டின அச்சம் வெகுளி அவா அழுக்காறிங்ஙனே
மாண்டன சேர்தும் வளர்புன்சடைமுக்கண் மாயனையே.

## ஸௌராஷ்ட்ர நீதிஸம்பு

**116.** நீதி மன்றத்தில், அன்பு, நியாயம், உண்மை, தர்மம் இவைகளைக் கையாண்டு இரு கக்ஷிகளிடத்தும் பாரபக்ஷமின்றி எவன் நடு நிலையில் நின்று தீர்ப்பு கூறுகின்றானோ அவனே உண்மை நீதிபதி ஆகின்றான்.

**117.** ஸத்தியம், ஸாந்தம், ஸீலம் இவைகளுக்கு புறம்பாக "கடவுள் இல்லை" என்று நினைத்து தீச் செயல்களை எவன் செய்கின்றானோ அவனை பூராஉலகமே தூஷணநிந்தனை செய்யும்.

**118.** அநேக வருஷங்களில் ஆசார நியதியினின்று சற்றும் பிசகாமல் ஆயிரம் அசுவமேத யாகங்களைச் செய்த பலாபலன்களைச் சினம் என்னும் கொடுங்குணம் பூர்ணமாகக் கெடுத்து விடும்.

**119.** உலகில் நம் வாழ்க்கையில் சில சமயம் அற்ப மனிதர்களுடன்கூட சகவாசம் செய்துகொள்ள சந்தர்ப்பம் ஏற்படும். சுண்ணாம்பு வெத்திலைப் பாக்குடன் சேர்கின்றது. சுண்ணாம்பு இல்லாமல் தாம்பூலம் தரித்தால் சிகப்பு நிறம் கிடைக்குமோ?

185

உ
முருகா

# கற்பு

## பொன்னம்மாள்

அந்த ஊர்க் கோடியில் அவர்களுடைய குடிசை இருந்தது. அந்த சிறு குடிசையில் அவர்கள் வாழ்வு அமைதியாக நடை பெற்றுவந்தது. அரண்மனையில் அரசனுக்கும் அரசமாதேவிக்கும் கிடைக்காத ஒரு அலாதியான சாந்தியும் இன்பமும் அவர்களுக்கு இருந்தன. வறுமையால் அவர்கள் உடல் மெலிந்தாலும் உள்ளம் மெலியவில்லை. பொன்னம்மாளும் அவள் கணவன் புருஷோத்தமனும் ஒருபொழுதும் கருத்து வேற்றுமை யின்றி ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

பொன்னம்மாளுடைய உடம்பு கருமையாகயிருந்தாலும் உள்ளம் வெண்மையாக இருந்தது. அவள் அதிகம் படிக்கவில்லை யானலும் படிப்பினுடைய பயன் அவளிடம் அமைந்திருந்தது. படிப்பினுடைய பயன் அடக்கமும் இறைவழிபாடுமாகும். அவள் எப்பொழுதும் முன்னைப் பிறப்பின் தொடர்பினுல் முருகப் பெருமானை மறவாமல் சிந்தித்த வண்ணமாகவே இருப்பாள். இளம் பூரணனுடைய இணையடிகளை எண்ணும்பொழுதெல்லாம், அவள் உள்ளம் உருகி வெள்ளம்போல் கண்ணீர் பெருகும். நினைப்பற நினைக்கும் பெற்றி முன்னைத் தவத்தால் அவளுக்கு வாய்த்திருந்தது. கூர்மையான அறிவும் நேர்மையான உள்ளமும் படைத்த அவள் கணவனுக்கு வேண்டிய பணிவிடைகளையும் குறைவறச் செய்வாள்.

புருஷோத்தமன் அந்தஊரில் ஒரு சிறு வெற்றிலைப்பாக்குக் கடை வைத்துக்கொண்டிருந்தான். அதனுல் மிகச் சிறிய வருவாயே கிடைத்தது. வருவாய் குறைவாக வந்தபோதிலும் பொன்னம்மாள் செட்டும் சிருமாகக் குடித்தனத்தை நடத்திக் கொண்டு வந்ததால் அவன் வாழ்வு இன்பமாகவே கழிந்தது.

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

என்ற திருக்குறளுக்கு அவர்கள் வாழ்வு எடுத்துக்காட்டாகவே இருந்தது.

பொன்னம்மாளுக்கு ஆடம்பரமாக ஆடையாபரணங்களை அணிந்துகொள்ளவேண்டுமென்ற விருப்பம் ஏற்பட்டதே இல்லை. அவசியமில்லாமல் யார்வீட்டிற்கும் அவள் போவதில்லை. அக்கம் பக்கமுள்ள பெண்கள் அவளைக் கண்டு ஏதாவது வினவினுல் கேட்ட வினவுக்கு மட்டும் சுருக்கமாகப் பதில் சொல்லுவாள். வழவழ வென்று ஊர்க் கதைகளை உழக்கிலளக்கும் தன்மையை அவள் வெறுப்பாள். எழுந்த உடன் நீராடி

தோய்த்து உலர்ந்த சீலையை உடுத்துக் கொண்டு, திருநீறும் குங்குமமும் அணிந்துகொண்டு உமாதேவியைப் போல் விளங்குவாள். வைத்தியருக்கென்று ஓர் அணுவும் அவள் கொடுத்ததே இல்லை. தூய்மையும் வாய்மையுமுள்ள அவளை நோய் அணுகாதல்லவா?

சுசியாகவும் ருசியாகவும் உணவுகளை அமைத்துக் கணவனுக்குப் படைப்பாள். அவள் கணவன் புருஷோத்தமனுக்கு இருதய நோய் வந்துவிட்டது. அதனால் அவள் பெரிதும் வருந்தினாள். பெரிய மருத்துவர்களைக் கொண்டு நிரம்பப் பொருள் கொடுத்து சிகிச்சை செய்ய அவளால் இயலவில்லை. உயிரினும் இனிய கணவன் நோய் தாங்காமல் துடிப்பதைக் கண்டு அவள் மனம் துடித்தது. தனக்குத் தெரிந்த கை முறையான வைத்தியங்களைச் செய்தாள். அதனால் அது தீர்ந்தபாடில்லை.

"பவரோக வைத்திய நாதா! வினைதீர்க்கும் வேலாயுதா! அகத்தியர் போற்றும் அண்ணலே! மெய்ஞ்ஞான பண்டிதா! என் கணவனுடைய நோயைத் தீர்த்தருள வேண்டும். கருணையே வடிவாய் இருக்கின்ற தேவரீரையன்றி எனக்குப் பற்றுக்கோடு வேறில்லை. ஆதலால் என்னைக் கை நழுவவிடாமல் காப்பாற்றுவது உன் கடமை.

"ஆரும் புகழ அநேகர்பிணி அகற்றி நின்றாய் அமரர்சிறை
தீரும் வண்ணம் அருள்புரிந்த தேவா! கணவன் பிணியதனைப்
பேரும் வண்ணம் அருள்புரிவாய் பேரூர் மேவும் பெருந்தகையே!
பாரும் விசும்பும் பணிந்தேத்தும் பழநிக் குமரப் பெருமானே!"

என்று முருகவேளை வேண்டுவாள்.

"பழநியாண்டவனுக்கு அரோகரா" என்ற ஒரு சத்தம் அவள் குடிசைக்கு முன் கேட்டது. வெளியே வந்து பார்த்தாள். ஒரு வயோதிகமான சிவனடியார் திருவோட்டுடன் நின்று கொண்டிருந்தார். அவளுக்கு அக்காட்சி பழநியாண்டவனே நேரில் வந்தது போல் ஆறுதலை அளித்தது. அடியாரை வணங்கினாள். அவர் கையால் தன் கணவனுடைய இதயத்தில் திருநீறு அணிவித்தாள்.

"அம்மா! மனம் வருந்தாதே. இந்த இதய நோய் தீர ஒரு உபாயத்தைக் கூறுகின்றேன். அதைநாடோறும்கணவனுக்குக் கொடுத்துவருவாயாக. இதயநோய் தீர்வதுமட்டுமன்று; இதயத்திற்கு அளவற்ற ஆற்றலையும், அது கொடுக்கும். பொதுவாக அதை எல்லோரும் காலையிலும், முடிந்தால் மாலையிலும் ஆகாரமாக அருந்தி வரலாம். உடல்நலத்தைக்கெடுக்கும் எத்தனையோ வகையான பானங்களுக்குப் பதில் இதை அருந்தி எல்லோரும் நன்மை யடையலாம். பாரத! வீரர்களில் பெரிய பராக்கிரமம்

படைத்தவன் அர்ச்சுனன் என்பது உலகமறிந்த விஷயம். அவன் பேரில் ஒரு மரம் உண்டு. அம்மரத்திற்கு அர்ச்சுன மரமென்று பேர். தமிழில் அதனை மருதமரமென்று அழைப்பார்கள். அந்த மருத மரம் மிகவும் சிறந்தது. அதன் பட்டையைக் கொண்டு வந்து உலர்த்தி இடித்து, பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் ஒரு சிறிது சுக்கும் ஏலரிசியும் சேர்த்துப் பொடித்துக் கொள்ளவும். ஒரு வேளைத் தண்ணீரில் திரிகடி பிரமாணம் (மூன்று விரல்களால் எடுக்கும் அளவு) அத்தூளைச் சேர்த்து வெல்லமாவது நாட்டுச் சர்க்கரையாவது இட்டுக் கொதிக்க வைத்து வடித்து பால் சேர்த்துக் கொடுக்கவும். இதை நீயும் அருந்தி வருக. இதனால் இதய நோய் தீர்ந்து, இதயம் வலுப்படும். இதற்கு **அர்ச்சுன பானம்** என்று பேர். பழநியாண்டவனுடைய பரிபூரணமான கருணை உனக்குத் துணைபுரியுமாக" என்று கூறிவிட்டு அந்த அடியார் அகன்றனர். பொன்னம்மாள் அதை அவ்வண்ணமே செய்து கணவனுக்குச் சில நாட்கள் தொடர்ந்து கொடுத்துவர நோய் நீங்கப் பெற்றது. புருஷோத்தமன் முழுநலம் பெற்று மகிழ்ச்சியுற்றான்.

“காயமானவர் எதிரே அவரென வந்து பேசிப் பேணுவதது”

என்று அருணகிரிநாதர் திருப்புகழில் கூறியவாறு தான் வழிபடும் பழநியாண்டவனே அந்த அடியாரை அதிஷ்டித்துத் தனக்கும் தன் கணவனுக்கும் அருள் புரிந்ததாகப் பொன்னம்மாள் நினைத்து மகிழ்ந்து சிவகிரிமேவும் செவ்வேளைச் சிந்தித்து வந்தித்தாள்.

இன்பமும் துன்பமும் மாறி மாறி வருந் தகையன. அவ்விரண்டும் ஒன்றோடொன்று இணைந்திருப்பவை. பகலும் இரவும்போல் அவை ஒன்றன்பின் ஒன்றாக வரும். புருஷோத்தமனுடைய தங்கை முனியம்மாளுடைய கணவன் மாண்டுவிட்டனன். அதனால் அவள் சிறுதொகையுடன் அண்ணன் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அது பொன்னம்மாளுக்கு எட்டாமிடத்தில் காகவாகனக் கடவுள் வந்ததுபோலாயிற்று. சிறிது பணத்துடன் தாய்வீட்டிற்கு வந்தபடியால் முனியம்மாளுக்கு பாதம் பூமியில் படியவில்லை. எளிய வாழ்வில் இருக்கும் புருஷோத்தமனுக்குத் தங்கை கொண்டுவந்து கொடுத்த பணம் பெரிய ஆறுதலையும் மகிழ்ச்சியையும் தந்தது. அதைக் கொண்டு தனது கடையைச் சிறிது விரிவாக நடத்தலாயினன். அதனால் மேலும் அவளுக்கு மமதை யேற்பட்டது. பொன்னம்மாளை ஒரு புழுவாக எண்ணிப் பேசுவாள். வாய்க்கு வந்தபடி ஏசுவாள். அவள் குரல் மேகம் இடித்ததுபோல் குளிர்ச்சியாக இருக்கும். அவள் பார்வை ஆந்தையின் பார்வைபோல் அழகாக இருக்கும். அவள் உள்ளம் வடவாமுகாக்கினிபோல் கொதித்துக்கொண்டிருக்கும். இத்தனை அருங்குணங்களைப் படைத்த அவளால் பரம சாதுவாகிய பொன்னம்மாளுக்கு

பெருந் தலைவலி ஏற்பட்டது. அவளுடன் தான் எதிர்த்துப் போராடினால் கணவன் மனம் வருந்துமென்றும், வேறுபடுமென்றுங் கருதி பொறுமைக்குக் கருவூலமாக இருந்துவந்தாள்.

நாள் செல்லச் செல்ல முனியம்மாளுக்கு அடுத்த வீட்டுச் சினனுடன் தொடர்பு ஏற்பட்டது. கூடா ஒழுக்கங் கொண்ட அவள் குணம் முன்னிலும் பன்மடங்கு சீர்கெட்டது. அதனையறிந்துங்கூட பொன்னம்மாள் தன் கணவனிடம் அதை வெளியிட்டாளில்லை. மனதுக்குள் மிகவும் சங்கடமுற்றாள். தன்னுடையநடையைப் பொன்னம்மாள் ஒருவேளை கணவனிடம் சொல்லக்கூடுமோ? என்று ஐயுற்ற முனியம்மாள் மேலும் அவளைக் கொடுமைப்படுத்தினாள்.

பொன்னம்மாள் எவ்வளவு ஒதுங்கிப்போனாலும் முனியம்மாள் அவளை வலுவில் சண்டைக்கிழுத்து வைவாள். "ஏண்டி! என்னைக் கண்டால் ஏன் இப்படி வெறுக்கிறாய். நான் விதவையாகி உன் வீட்டிற்கு வந்திருக்கின்றேன் என்ற எண்ணமா? நான் என்ன சும்மாவா வந்தேன்? என் பணந்தான் உன் கணவனுடைய முதல். நான் நினைத்தால் உன் வாழ்வின் தலையில் இடிதான் விழும். ஐயோபாவம் என்று பொறுத்துப் போகின்றேன். நான் பொறுத்துப் போகப் போக நீ தலைமேல் ஏறி மிதிக்கின்றாய். எனக்கு வந்த கதி உனக்கும் வரும். எச்சரிக்கை செய்கின்றேன். உன் கபடநாடகத்தை நான் நன்றாக அறிவேன். கேடுகெட்ட சிறுக்கியே! வக்கில்லாத வங்குரங்கே! மாயக் கள்ளி! உன் கெட்ட நடவடிக்கை எனக்குத் தெரியும். சிவனே என்று நான் இருக்கிறேன். கடவுள்தான் உனக்குக் கூலி கொடுப்பார்" என்று முனியம்மாள் பொன்னம்மாளை சோனாமாரியாக நிந்தித்தாள்.

இந்த சொல்லம்புகளால் துளைக்கப்பட்டப் பொன்னம்மாள் இதயம் புண்ணாகி நொந்தாள். ஒன்றும் பதில் கூறாது நின்றாள். அவள் கண்களினின்றும் நீர் ஆறாய்ப் பெருகியது. மீண்டும் முனியம்மாள், "ஏண்டி! நான் என்ன சொல்லிவிட்டேனென்று இப்படி மாயக்கண்ணீர் வடிக்கின்றாய்? அழுகின்ற வீட்டில் கழுதை கூட நுழையாது. உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சலா? போய் வேலையை ஒழுங்காகப்பார்" என்று கர்ஜித்தாள். அந்த வேளையில் புருஷோத்தமனும் அங்கு வந்தான். இந்த பெரிய குழப்பத்தைக் கண்டு அவன் மனம் வேதனையடைந்தது. உத்தமமான பத்தினியின் கண்ணீரைக் கண்டு இரக்கமுற்றான். 'என்ன சங்கதி?' என்று கேட்டான்.

முனியம்மாள், "ஒன்றுமில்லையண்ணா! தொட்டாசிலுங்கி மாதிரி இருக்கின்றாள் இவள். ஒன்றுமே நான் சொல்லவில்லை. என் மேல் சதா சீறிவிழுகின்றாள். மனத்திற்குள்ளேயே என்னை வைகின்றாள். அப்படியெல்லாம் செய்யாதே. நான் கணவனை

யிழந்து மனம் நொந்து வந்திருக்கின்றேன். ஏன் என்னை வெறுக்கின்றாய்? என்று கேட்டேன். அதற்குத்தான் இப்படி அழுகின்றாள்" என்றாள்.

புருஷோத்தமன், "பெண்ணே! என் தங்கையை ஏன் நீ வெறுக்கின்றாய்? பாவம் அவள் இளமையில் கணவனைத் துறந்தவள். நம்முடைய ஆதரவும் அன்புந்தான் அவளுடைய கவலைப் புண்ணுக்கு மருந்து. நீ நல்ல புத்திசாலியாயிற்றே. என் மனம் போல் நடக்கும் உனக்கு நான் அதிகம் சொல்ல வேண்டாமே. இருவரும் ஒற்றுமையாக இருங்கள்" என்றான்.

பொன்னம்மாள், "பிராணபதி! நான் வழிபடுகின்ற வடிவேல் சாட்சியாகச் சொல்லுகின்றேன். அண்ணி மீது எனக்கு அணுவளவும் வெறுப்பு கிடையாது. நான் அவர்களை அலட்சியம் செய்ததுமில்லை. செய்யப்போவதுமில்லை. அவர்களே என்னை வலிதில் வாய்க்கு வராத வம்பு மொழிகளால் வைது விட்டு என் மீது வீண்பழி போடுகின்றார்கள்" என்றாள்.

இதைக் கேட்டு முனியம்மாள் ஓவென்று அழுது புலம்பினாள். இந்த நிகழ்ச்சியைக் கண்ட புருஷோத்தமன் இருவருக்கும் சமாதானஞ் சொல்லிவிட்டு சஞ்சலத்துடன் தன் கடைக்குச் சென்றான். அவன் மனத்தில் ஒரு பெரிய குழப்பம் ஏற்பட்டது. மனைவியோ உத்தம குணம் படைத்தவள். அவள் பக்கம் சேர்ந்து பேசினால் இளம் கைம்பெண்ணாக வந்த தங்கை மனம் நோவாள். தங்கை பக்கம் சேர்ந்து பேசினால் குற்றமற்ற குணவதியாகிய மனைவி மனம்நோவாள். ஒரு பக்கமும் சார முடியாமல் தருமசங்கடமடைந்தான்.

முனியம்மாளுக்கு வரவர மூர்க்கத்தனம் அளவுக்கு மேல் வளர்ந்தது. அடிக்கடிப் பொன்னம்மாளைப்பற்றி தமயனிடம் புகார் சொல்லிக்கொண்டேயிருப்பாள். முனியம்மாள் இல்லாத சமயத்தில் ஒருசமயம் அண்ணனைப் பார்த்து, "அண்ணா! இந்த உலகில் நீராழங்கண்டாலுங் காணலாம். நெஞ்சாழங் காணமுடியாது. அதிலும் பெண்களுடைய மனத்தையறியப் பிரமனாலும் முடியாது. ஆவதும் அழிவதும் பெண்களாலே தான். மனைவியால் மானமிழந்து மதிகெட்டு மயங்கினோர் பலர். உனக்கு ஒன்றுந் தெரியாது. பால் போன்ற மனம் படைத்த உனக்குச் சூது வாதுகளைக் கூர்மையாகப் பார்த்தறிகின்ற சக்தியில்லை. வீட்டிலேயே இருக்கின்ற எனக்குத் தானே தெரியும். உண்மைக்கு மாறாக ஒருபோதும் நான் உரைக்கமாட்டேன். உன் மனைவியைப்பற்றி விளக்கமாக நான் ஒன்றுஞ் சொல்ல மாட்டேன். போகப்போக உனக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும்" என்றாள்.

இவற்றைக் கேட்டதும் புருஷோத்தமன் உள்ளத்தில் ஒரு புயல் உருவாயிற்று. பலப்பல எண்ணினான். "தன் மனைவியைப்

பற்றி அவள் கூறும் சொற்கள் அத்தனையும் சரியன்று என எண்ணினன். கருத்து வேற்றுமையால் தன் மனைவி மீது இவ்வாறு இவள் வெறுப்புரை கூறுகின்றாள்" என்று நினைத்து தங்கைக்கு வேறு ஒன்றும் பதில் கூறாமல் போய் விட்டான்.

"எந்தவகையான உபாயஞ்செய்தால் அண்ணன் அண்ணியை வெறுத்து ஒட்டுவான். அப்படி ஒட்டிவிட்டால் கூடா ஒழுக்கத்துடன் நிம்மதியாக நாம் வாழலாம்" என்று முனியம்மாள் நீண்ட ஆலோசனை செய்தாள்.

தன்னிடம் தொடர்பு கொண்டுள்ள அடுத்த வீட்டுச் சினனுடைய ஒரு படத்தை வாங்கிவந்து பொன்னம்மாளுடைய பெட்டியில் வைத்துவிட்டாள். புருஷோத்தமன் தற்செயலாகத் தன் மனைவியின் பெட்டியைத் திறந்தான். அதில் ஒரு பட்டுத் துணியில் சுற்றி வைத்திருந்த அடுத்த வீட்டுச் சினனுடைய படத்தைக் கண்டு திடுக்கிட்டான். அப்படத்தின் கீழே "அன்புள்ள பொன்னுக்கு இது அன்பளிப்பு. சினன்" என்று எழுதியிருந்தது. அதை எடுத்துக்கொண்டு கடைக்குப் போனான். அவன் மனத்தில் சினத்தீ மூண்டது. அன்று தன் தங்கை சொன்ன சொற்களை அப்போது நினைத்தான். இப்படத்திற்கும் தங்கை கூறியதற்கும் சம்பந்தமுள்ளதாக நினைத்தான். "போகப் போக விளங்கும்" என்ற சொல்லை நினைத்துப் பெருமூச்சு விட்டான். மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டான். அளவற்ற துன்பத்தையடைந்தான். எப்போதும் சாந்தகுணம் படைத்தவனுதலின் அவசரப்பட்டு மனைவியைத் தண்டிக்க முயன்றானில்லை. பித்துப் பிடித்தவனைப்போலாயினன். மனைவியை அதுபற்றி வைதோ அடித்தோ தண்டித்திருப்பானயின் அந்தக் கோபம் ஒரு அளவுக்குத் தணிந்திருக்கும். கோபம் உள்ளுக்குள்ளேயே சுடர் விட்டெரியாமல் உமிக்காந்தல்போல் கருகியது. மனைவியிடம் பேசுவதில்லை. உணவு ஆள்மூலம் கடைக்குக் கொண்டுவந்து சாப்பிடுவான். மனைவி அன்புடன் அருகில் வந்து பேசுவாளாயின் நாகப்பாம்புபோல் சீறுவான்.

பொன்னம்மாளுக்குக் கணவனுடையமாறுதலுக்குங் கோபத்திற்குங் காரணம் இன்னதென்று தெரியவில்லை. ஒன்றும் புரியாது மனம் நொந்தாள். விதியை நினைந்து உள்ளம் வெந்தாள். வீட்டிற்கு வந்திருக்கும் நாத்தியினுல் விளைந்த வினையென்று மட்டும் அவள் மனத்தில் உணர்ந்தாள். அவளுக்குப் பெரிய கலக்கம் உண்டாயிற்று.

"முருகா! ஒரு குற்றமும் புரியாத என்னை என் கணவன் வெறுக்கவேண்டிய காரணம் யாது? எம்பெருமானே! நான் உன்னையே நம்பிய ஏழை. கருணைக் கடலே! என் குறைகளைத்

தீர்ப்பது உன் கடமையல்லவா? "காக்கக்கடவியநீ காவா திருந்தக்கால் ஆர்க்குப் பரமா! அறுமுகவா! முருகா! கதிர் வேலா! நல்ல இடங்காண் இரங்காய் இனி"; பெண்ணென்றால் பேயும் இரங்குமே! பெருங் கருணை நிறைந்த தேவரீர் தான் இதற்குப் பரிகாரம் புரியவேண்டும். உன்னை நம்பிய என்னை நட்டாற்றில் விட்டுவிடாதே. அடியார் இடர் களையும் அண்ணலே!" என்று முருகனிடம் முறையிட்டாள்.

இப்படியாக ஐந்தாறுமாதங்கள்கடந்தன. வாழ்வில் வெறுப்பு கொண்ட புருஷோத்தமன் ஒருவரிடமும் சொல்லாமல் கடையைப் பூட்டி சாவியை வீட்டில் வைத்துவிட்டு எங்கோ போய் விட்டான். கணவன் எங்கு சென்றான் என்பதை யறியாது பொன்னம்மாள் ஏங்கினாள். உணவையும் உறக்கத்தையும் மறந்தாள். பேய்பிடித்தவளைப்போல் ஆனாள். அவள் கண்களில் முத்து முத்தாக நீர் மல்கியவண்ண மிருந்தது.

முனியம்மாளுக்கு மிகவும்கொண்டாட்டம். சதா சீனனுடன் கூடி சிரிப்பதும் ஆடுவதுமாக இருந்தாள். தன் சூழ்ச்சி பலித்துவிட்டதென்று கருதி பெருமகிழ்ச்சியுற்றாள். முனியம்மாளும் சீனனும் ஒருசமயம் பழநிக்குப்போய் ஒரு சத்திரத்தில் தங்கி உல்லாசமாகவும் அச்சமின்றியும் மகிழ்வுடன் இருந்தார்கள். இருவரும் ஈருடல் ஓருயிராக ஒன்றி நின்றார்கள். இப்படியிருவரும் ஆடிப்பாடிக்கொண்டு செல்வதை அங்கு ஒரு புறம் துயரக்கடலில் முழுகி பித்தனைப்போல் உருமாறியிருந்த புருஷோத்தமன் கண்டான். அவன் திடுக்கிட்டான். தன் கண்களை விழித்துவிழித்துப் பார்த்தான். சீனனும் தங்கையும் ஒய்யாரமாக உலாவுவதைப் பார்த்த அவனுக்கு ஒரு பெரிய சுமை நீங்கியது போல் இருந்தது. தன் மனைவி குற்றமற்றவள் என்பதையும், தங்கை செய்த மாயச் சூழ்ச்சி என்பதையும் தெரிந்தான். குற்றமற்ற மனைவியை இத்தனைக் காலம் தான் வெறுத்ததையுன்னி வருந்தினான். ஒருவேளை அவளை இவர்கள் கொன்றுவிட்டார்களோ? என்று ஐயுற்றான். இவன் அவர்களைப் பார்த்தான் என்பதை அவர்கள் அறியவில்லை. நேரே ஊருக்கு வந்தான். வீட்டில் நுழைந்தான். மனைவி துரும்பாய் மெலிந்து நலிந்து அழுதுகொண்டிருப்பதைக் கண்ணாரக் கண்டான். அவளை எடுத்து மார்போடுத் தழுவி அவள் கண்ணீரைத் துடைத்தான்.

"அருமை மாதரசே! ஏன் இப்படி இளைத்துப் போனாய்? நான் யாத்திரையாகப் போயிருந்தேன். அழாதே; என் தங்கை யெங்கே?" என்று கேட்டான். பொன்னம்மாள், "தாங்கள் என்னிடம் சொல்லாமல் போய்விட்டதனால் நான் தாங்கமுடியாத வேதனையுற்றேன். அவர்கள் எங்கு போனார்களோ? எனக்குத் தெரியாது" என்றாள். புருஷோத்தமன் பழயபடியே கடையைத் திறந்து வியாபாரம் செய்தான்.

ஒரு மாதத்திற்குப்பின் முனியம்மாள் வந்தாள். அண்ணனைக் கண்டு திடுக்கிட்டாள். அண்ணியும் அண்ணனும் பழைய படியே ஒற்றுமையாக இருப்பதைக் கண்டு அவளுக்கு ஆத்திரம் உண்டாயிற்று. ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. புருஷோத்தமன் தங்கையைப் பார்த்து "அம்மா எங்கு போயிருந்தாய்?" என்று கேட்டான். உன் மனைவியின் கொடுமையைப் பொறுக்க முடியாமல் சில நாட்களாவது நிம்மதியாக இருக்கலாம் என்று என் சிறிய மாமி வீட்டிற்குப் போய் தங்கியிருந்துவந்தேன். ஏன் என்னைப்பற்றி இவள் ஏதாவது பொய்க்கதை கட்டினளா?" என்றாள். "அதெல்லாம் ஒன்றுமில்லை" என்றான் புருஷோத்தமன். அவள் மனதிற்குள்ளேயே பெரும் புயல் கிளம்பி அடித்துக் கொண்டிருந்தது.

முனியம்மாள் தனக்கு ஏற்பட்ட கர்ப்பத்தைத் பிறரறியாது அழிக்க முயன்றாள். முடிவில் அது அவள் உயிருக்கு முடிவைக் கொடுத்தது. முனியம்மாளின் மரணம் புருஷோத்தமனுக்கும் பொன்னம்மாளுக்கும் ஆறுதலையே அளித்தது. இன்னும் அவள் இருந்து பழிக்கு ஆளாவதைவிட இந்த மட்டோடும் இறந்தது நல்லது என்று எண்ணினன் புருஷோத்தமன். தன்னைப் பிடித்த சனி விலகியது என்று எண்ணினள் பொன்னம்மாள். முருகப் பெருமானுக்கு நன்றி கூறினள்.

சில காலம் இத்தம்பதிகள் இனிது வாழ்ந்தார்கள். புருஷோத்தமனுக்கு அடிக்கடி காய்ச்சல் வந்து வலிமை குன்றியது. வியாபாரத்தில் முயற்சி குன்றியது. மருத்துவர்கட்குச் சிறிது பணம் செலவழிந்தது. கையில் இருந்த பொருள் யாவுந் தீர்ந்துவிட்டன. வீட்டுடன் பலவீனமாக இருந்து வந்தான். பொன்னம்மாள் என்ன செய்வாள்? தன் மீது இருந்த ஒன்று இரண்டு நகைகளை விற்றும், பித்தளைப் பாத்திரங்களை விற்றும் கணவனைக் காப்பாற்றிவந்தாள். தனக்குத் தெரிந்த ஒரு தனவந்தர் வீட்டில் போய், கோதுமை அரைத்தும், நெல் குத்தியும் உடம்பை வாட்டி அதனல் வந்த ஊதியத்தைக் கொண்டு கணவன் பசியை யாற்றினள். அப்போதும் அவள் கணவனிடம் முன்னிலும் பன்மடங்கு பயபக்தியுடன் நடந்து வந்தாள். முகங் கோணமல் அவன் வாய்க்கு இனிய பண்டங்களைத் தயாரித்துத் தருவாள். அவன் உள்ளங் குளிரும்படி இனிமையாகப் பேசி அவனை மகிழ்விப்பாள்.

வரவர வறுமைப்பிணி அவர்களை வாட்டியது. வாழ்க்கை வண்டி மிகவும் இடர்பட்டு நகர்ந்தது. அல்லும் பகலும் கணவனும் மனைவியும் கல்லுங் கரையுமாறு வேண்டி முருகனுடைய திருவடிகளை வணங்கி வந்தார்கள்.

(தொடரும்.)

193

உ

முருகா

# கந்தசஷ்டி விரதம்

உலகத்திலே சிறந்த செல்வம் படைத்தவர் சிலரும், வறுமையாகிய தீயின்மேல் கிடந்து வாடுகின்றவர் பலருமாக இருக்கின்றனர். இதற்கு என்ன காரணம்?

இறைவனை நினைந்து நல்ல விரதங்களை நோற்றவர் சிலர். விரதங்களை நோலாதவர் பலர். முற்பிறப்பில் நல்விரதமிருந்து இறைவனை வழிபட்டவர் இப்பிறப்பில் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வில் வாழ்வார்கள். அல்லாதவர் நல்குரவில் ஆழ்ந்து அல்லல்படுவர். இதனைத் தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் தெரிவிக்கின்றனர்.

இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலா தவர்.

"இரைதேடுவதோடு இறையுந்தேடு" என்று பாம்பன் சுவாமிகள் கூறுவார். ஆகவே மனிதப் பிறப்பெடுத்த நாம் இப்பிறப்பை நமக்குத் தந்த தலைவனைக் குறித்து விரதங்களிருந்து வேண்டுதல் வேண்டும்.

எளிதிலே அருள்புரியும் மூர்த்தி கலியுக வரதராகிய கந்தக் கடவுள். தலையாய தேவாதி தேவர்க்கெல்லாம் தலையாய தனிப்பெருந் தலைவர். "மாலயனுக்கு அரியான்; மாதவரைப் பிரியான்" என்பார் அவரைப்பற்றி அருணகிரிநாதர். முருகப்பெருமானை நினைந்து நல்விரதங்களை யாற்றி வழிபாடு செய்தோர், எல்லா நலன்களையும் எளிதிற் பெறுவர்.

முருகவேளுடைய விரதங்களுள் தலையாய விரதம் கந்த சஷ்டி விரதம் ஆகும்.

சிவபெருமானுடைய விரதங்கள் எட்டு. அவற்றுள் தலையாயது சோமவார விரதம். அந்த அஷ்ட விரதங்களுள் ஒன்று தீபாவளி விரதம். இறைவன் ஜோதி வடிவானவன்.

"மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்'
"திருவையா றகலாத செம்பொற் சோதி"
"ஆதியுமந்தமுமில்லா அரும் பெருஞ் சோதி"
"தீபமங்கள சோதி நமோநம"

என்பனவாதி தமிழ் வேத வசனங்களால் அறிக.

ஆகவே சிவபெருமானை உள்ளன்புடன் நினைத்து வரிசையாக விளக்குகளை வைத்து வழிபடுகின்ற விரதம் தீபாவளி.

தீபம்—விளக்கு. ஆவளி—வரிசை.

விளக்குகளை வரிசையாக வைத்துச் சிவபெருமானைத் தீபாவளியன்று வழிபடவேண்டும். இதன் பெருமையையும், நோற்கும் முறையையும் உபதேச காண்டத்தில் நன்ருக உரைக் கப்பட்டிருக்கின்றது. இவ்விரதத்தை உமையம்மையார் நோற்றனர்.

நரகாசுரனைக் கொன்ற காரணத்தால் கொண்டாடப்படு வது தீபாவளி என்பது பிழை. ஒரு அசுரனைக் கொன்றதற் காக ஒரு கொண்டாட்டம் இருக்கமுடியாது. அப்படியானல் இரணியன், ராவணன், இடும்பன், பகன், சலந்தரன், அந்தகன் முதலிய அரக்கர்களைக் கொன்றதற்கும் கொண்டாட்டம் இருக்கவேண்டும். ஆகவே நரகாசுரனை வதைத்ததற்கும் தீபாவளிக்கும் தொடர்பு இல்லை என உணர்க.

தீபாவளி ஐப்பசித் திங்கள் தேய்பிறை சதுர்த்தசி திதியில் விரதம் இருக்கவேண்டும். அன்று உபவாசமாக இருந்து சிவ பெருமானை வழிபடவேண்டும்.

மறுநாள் அமாவாசை யன்று பாரணஞ் செய்யவேண்டும்.

அதற்கு மறுநாள் வளர்பிறை பிரதமையிலிருந்து கந்த சஷ்டி விரதம் தொடங்கவேண்டும்.

பிரதமையன்று அதிகாலை எழுந்து நதியாயின் நீரின் எதிர் முகமாக நின்றும், கிணறு, குளங்களாயின் வடதிசை நோக்கி நின்றும், தண்ணீரில் அறு கோணம் வரைந்து அதில் சடாக்கர மந்திரத்தை எழுதி, இடையே பிரணவத்தை எழுதி, அத்தண்ணீரைச் சிவகங்கையாகப் பாவனை புரிந்து அதில் முழுகவேண்டும்.

பின்னர் கரையேறி தோய்த்து உலர்ந்த தூய ஆடைகளை யுடுத்து அநுஷ்டானம் புரிந்து, முருகவேள் திருக் கோயிலுக் குச் சென்று மலர் இட்டு விதிப்படி வலம்வந்து, திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அநுபூதி இவைகளை ஓதி உள்ளம் உருகி ஒருமையுடன் வழிபட வேண்டும்.

இவ்வாறு ஐந்துநாட்கள் நோற்றபின் ஆருவது நாள் சஷ்டியன்று, முன் கூறியபடி நீராடி, சிறப்பாக ஐபதபங்களைச் செய்யவேண்டும். அதிக பாராயணஞ் செய்து சிந்தனை முழு வதும் செவ்வேள் திருவடிக்கே செலுத்தவேண்டும். அன் றிரவு ஆறு காலங்களில் முருகன் திருவுருவத்திற்கு ஆயிரத் தெட்டு மந்திரங்களால் அருச்சனை புரியவேண்டும். உறங்கா மல் உணர்வுடன் குழந்தை உள்ளத்துடன் துதித்து வடிவே லிறையை வழிபடவேண்டும்.

மறுநாள் சப்தமி திதியன்று நீராடி வழிபாடு முடித்தபின் ஆறு அடியார்க்கு அன்னம் வழங்கி உணவு கொள்ளவேண்டும். அன்று பகலில் உறங்கக்கூடாது.

ஆறுநாட்களிலும் பூரண உபவாச மிருக்கமுடியாதவர்கள், ஐந்துநாள் பால்பழமுண்டு சஷ்டியன்று முழு உபவாசமாக இருக்கவேண்டும்.

இதுவும் மாட்டாதவர்கள் ஐந்துநாள் உச்சிவேளையில் இறைவனுக்கு நிவேதித்த உணவை யுண்டு இரவு பட்டினியாக இருந்து, ஆறுவதுநாள் மிகவும் அன்புடன் உபவாசமாக இருந்து வழிபடவேண்டும். ஐந்துநாட்களிலும் படுக்கையில் படுக்கக்கூடாது. தூய பட்டு விரித்து அதன் மீது படுத்து இதயத்தில் முருகனை நிறுவி அகக்கண்ணால் நோக்கி தியானித்த வண்ணமாகவே உறங்கவேண்டும்.

இவ்வாறு சஷ்டிவிரதம் இருந்தார் மகப்பேறு முதலிய எல்லா நலன்களையும் எளிதிற் பெறுவர். இவ் விரதத்தைப் பற்றிக் கந்தபுராணத்தில் கூறுமாறுங் காண்க.

வெற்பொடும் அவுணன் தன்னை விட்டிய தனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர்யாரும்
சொற்படு துலையின் திங்கள் சுக்கில பக்கந்தன்னில்
முற்பகலாதி யாக மூவிரு வைகல் நோற்றார்.

முருகவேள் முழுமுதற் கருணை முன்னிற்க.

---

## அற மொழிகள்

(அன்பன் மு. பெருமாள் எழுதியது.)

1. அன்பு மயமானவர் ஆண்டவன். ஆகவே அவரை அணுகவோ அல்லது அவர் அருளையடையவோ விரும்புவோர் அன்புமயமானாலன்றி முடியாது.

* * * *

2. ஆலயங்கள் மனிதர்கட்கு ஆண்டவனை நினைவூட்டும் சின்னங்களாகும். அங்கு செல்லும் பாமரர் முதல் பண்டிதர் வரை பக்தியென்ற ஒருவகை உணர்ச்சியால் தூண்டப் படுகின்றனர்.

* * * *

3. இறைவன் எல்லாவற்றையும் சமமாகப் பாவிப்பான். ஆகவேதான் அவரை இன்ப துன்பங்கள் பற்றுவதில்லை.

* * * *

4. ஈசனை நேசித்துப் பூசிக்காதவர்கள் அரசனாயிருந்தாலென்ன? அறிஞனாயிருந்தாலென்ன? கோடீஸ்வரனாயிருந்தாலென்ன? அகிலமெல்லாம் புகழும் பெருமையுடையவனாயிருந்தாலு மென்ன? அவையாவும் பயனற்றதாகவே முடிந்துவிடும்.

# அற மொழிகள்

(அன்பன் மு. பெருமாள் எழுதியது)

5. உத்தமர்கள் என்று உலகம் போற்ற வேண்டுமாயின் சர்வபரித்தியாகம் செய்துத்தானாக வேண்டும். உலை நெருப்பில் காய்ச்சித் தட்டிய தங்கந்தானே உயர்ந்த அணிகலன்களாக (நகைகளாக)ப் பிரகாசிக்க முடிகின்றது.

* * * *

6. ஊசலாடும் எண்ணங்கள் மனத்திற்கும், உடலுக்கும் சோர்வைத்தான் உண்டாக்கும். பெருங் காற்றில் அலைகின்ற மரம் முறிவதையும் கிளைகள் சிதைவதையும் பார்க்கின்றோமல்லவா?

* * * *

7. எண்ணும் எண்ணங்கள் நல்லதாயிருந்தால் நலமேயடைவோம். ஏன் எண்ணந்தான் வித்து. வித்து எதுவோ அது தானே விளையும்.

* * * *

8. எய்ப்பவன் என்றாலும் எய்க்கப்படுவான். வீசிய பந்து விட்ட இடம் வந்துசேர்வது போலே.

* * * *

9. ஐயம் வந்தால் நைய வேண்டியதுதான். வைத்தியரை நம்பாதவன் வாழ முடியுமா? தாய், தந்தை, குரு, தெய்வம், அறநூல்கள் ஆகியவர்களிடம் நம்பிக்கையில்லையென்றால் அழிய வேண்டியதுதானே. நம்பினால் வாழ்வு. நம்பிக்கையில்லையேல் நாசம்.

* * * *

10. ஒருமித்த மனத்துடன் எதிலும் ஈடுபடுக. உயர்வையடையலாம். கடவுள் ஒருவரே என்பதை உணர்வதே உய்யும் வகை. ஒரே சூரியன்தானே உலகத்தைப் பிரகாசிக்கச் செய்கின்றான்.

* * * *

11. ஓடியலையும் கருத்தை நிறுத்தினாலன்றி இறைவனை உன்னுள்ளே காணமுடியாது. அலையும் நீர் நிலையத்தில் அம்புலியைக் காணமுடியுமா? சிலையைச் சித்தரித்து செதுக்கி நிறுத்தினாலன்றி சிற்பத்திறனை எங்ஙனம் காணவியலும்?

* * * *

12. ஔவையாரைப்போல் அறத்தைச் சுருக்கி அருந்தமிழில் விரித்தாரில்லை. ஆண்டவனைப் போல் ஆருயிர்க்கு அருந்துணை புரிவாரில்லை.